17. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலுள்ள அட்டவணை மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் அட்டவணையிலும் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29-6-2004 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) பிரிவு 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. 21-1-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 622-ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் விதிக்கப்பட்டுள்ள மோட்டார் வரியினை 1-12-2001 ஆம் நாளிலிருந்து திருத்தியமைத்தும், அபராதத் தொகையினை தள்ளுபடி செய்தும், 28-7-2004 ஆம் நாளிட்ட உள் (போக்குவரத்து-1) துறையின் அரசாணை 1டி எண் 836-ல் வெளியிடப்பட்ட திருத்த அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. 2001 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் அல்லது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மறுவிற்பனை செய்யும் நோக்கத்திற்காக மேற்படி சட்டங்களின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அட்டவணைச் சரக்குகளின் மீது செலுத்தத்தக்க வரியினை பொது நலன் கருதி கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விலக்களித்து வணிக வரித் துறையின் 8-9-2004 ஆம் நாளிட்ட 144 ஆம் அரசாணை (நிலை)யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 9-7-2004 ஆம் நாளிட்ட 267 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்

(தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)]

23. 2001-2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2004)

2. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/2004)

3. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சிப் பெட்டித்திரையில் படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2004)

4. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2004)

5. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/2004)